


30.07.2024

தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் பொருளாதாரம் 8 சதவிகித வளர்ச்சியுடன் வேகமாக முன்னேறி வருவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. வேளாண் கட்டமைப்பு நிதியத்தின் கீழ் 76 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு.ஷிவ்ராஜ்சிங் சவ்ஹான் கூறியுள்ளார்.

3. கேரளாவில் நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் நிவாரண பணிகளுக்காக தமிழக அரசு சார்பில் 5 கோடி ரூபாய் வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

4. பாரீஸ் ஒலிம்பிக் போட்டியின் 10 மீட்டர் ஏர் பிஸ்டல் கலப்பு இரட்டையர் பிரிவில் மனு பாக்கர், சரப் ஜோத் சிங் இணை இன்று வெண்கலப்பதக்கத்தை வென்றது.

5. மேட்டூர் அணையிலிருந்து கூடுதல் உபரி நீர் திறக்கப்படுவதால் திருச்சி, நாமக்கல், ஈரோடு, கரூர் உள்ளிட்ட 11 மாவட்டங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இனி விரிவான செய்திகள்

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

பிரதமர் - மாநாடு

நாட்டின் பொருளாதாரம் 8 சதவிகித வளர்ச்சியுடன் வேகமாக முன்னேறி வருவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் வளர்ச்சி அடைந்த பாரதத்திற்கான பாதை என்ற தலைப்பிலான மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், விரைவில் இந்தியா 3ஆவது பொருளாதார வளர்ச்சி நாடாக உருவெடுக்கும் என்றார்.

அனைத்து துறைகளின் வளர்ச்சியிலும் மத்திய அரசு அதி கவனம் செலுத்தி வருவதாக தெரிவித்தார்.

கட்டமைப்பு துறையின் வளர்ச்சி அபரிமிதமானது என்று கூறிய அவர், மூலதன செலவினமே, முதலீடுகளுக்கான முக்கிய ஆதாரம் என்று சுட்டிக்காட்டினார்.

சர்வதேச அளவில் அதிக வளர்ச்சியுடன் குறைந்த பணவீக்கத்தை உடைய ஒரே நாடு இந்தியா என்று அவர் கூறினார்.

கடந்த 10 ஆண்டுகளில் 25 கோடி பேர் வறுமையிலிருந்து மீட்கப்பட்டதாக அவர் எடுத்துரைத்தார்.

இலகுவான வாழ்க்கை முறை, திறன்மேம்பாடு, வேலைவாய்ப்பு, சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு அரசு உயர் முன்னுரிமை வழங்குவதாக குறிப்பிட்டார்.

விக்சித் பாரத் என்ற இலக்கை நோக்கி தமது தலைமையிலான அரசு அர்ப்பணிப்புடன், தெளிவான பாதையில் சென்று கொண்டிருப்பதாக பிரதமர் பெருமிதம் தெரிவித்தார்.

இதனிடையே நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திற்கு மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் மக்களவையில் இன்றுமாலை பதில் அளிக்கிறார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

சிவ்ராஜ்சிங் சவ்ஹான்

வேளாண் கட்டமைப்பு நிதியத்தின் கீழ் 76 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான, 72 ஆயிரம் கட்டமைப்பு திட்டங்கள் நாடுமுழுவதும் மேற்கொள்ளப்பட்டதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு.ஷிவ்ராஜ்சிங் சவ்ஹான் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் துணை கேள்விகளுக்கு இன்று பதில் அளித்த அவர், இந்த திட்டத்தின் கீழ் தகுதியுடைய பயனாளிகளுக்கு ஒரு லட்சம் கோடி ரூபாய் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் மூலம் கடன் வழங்கப்பட்டதாக கூறினார்.

விவசாயிகளின் உற்பத்தி பொருட்களுக்கு, நியாயமான விலை கிடைப்பதற்காக, அவற்றை பாதுகாப்பதற்கான, உரிய நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாகவும் கூறினார்.

நாட்டின் வேளாண் வளர்ச்சி விகிதம் தற்போது 4 சதவிகிதமாக இருப்பதாக கூறிய அவர், பெருமளவிலான உணவு தானியங்கள் கையிருப்பில் உள்ளதாக குறிப்பிட்டார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

பியூஷ்கோயல்

பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையில் உலகின் 3 ஆவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா விரைவில் உருவெடுக்கும் என்று மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ்கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் நாட்டின் பொருளாதார அடித்தளங்களை மத்திய அரசு வலுப்படுத்தியுள்ளதாக எடுத்துரைத்தார்.

ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் நாட்டின் வளர்ச்சி விகிதம் 4.4 சதவிகிதமாக சரிந்ததோடு, பணவீக்க விகிதம் உச்சத்தை எட்டியதாக குற்றம் சாட்டினார்.

மத்திய அரசு நாட்டின் பொருளாதாரத்தை தவறாக கையாள்வதாக எதிர்கட்சி தலைவர் திரு.ராகுல் காந்தி தெரிவித்ததற்கு, கண்டனம் தெரிவித்துள்ள பியூஷ்கோயல், காங்கிரஸ் தலைமையிலான ஆட்சியின்போது தான், நிதி பற்றாக்குறை, குறைந்த வளர்ச்சி, குறைந்த அளவிலான அந்நிய முதலீடுகள், போன்றவை காணப்பட்டதாக குறிப்பிட்டார்.

ஆனால் தற்போது பிஜேபி தலைமையிலான ஆட்சியில், நாட்டில் நிலவும், பொருளாதார வளர்ச்சியால், உலக நாடுகள் நம்மை வியப்புடன் நோக்குவதாக சுட்டிக்காட்டினார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

வயநாடு

கேரள மாநிலத்தில் அதி கன மழை தொடர்ந்து பெய்துவரும் நிலையில், வயநாடு மாவட்டத்தின் முண்டக்கை, அட்டமாலா, சூரமாலா பகுதிகளில்

நேரிட்ட நிலச்சரிவில் உயிரிழந்தவர்களை மீட்கும் பணிகளில் பேரிடர் மீட்பு குழுவினர் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளனர்.

உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், மீட்கப்பட்ட 71 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அம்மாநில அரசு ராணுவ உதவியை கோரியதை அடுத்து பெங்களூரு மற்றும் தமிழகத்திலிருந்து பேரிடர் மீட்பு குழுவினர் கேரளம் விரைந்துள்ளனர்.

இந்நிலையில் முண்டக்கை பகுதியை வயநாட்டுடன் இணைக்கும் சூரக்கல் பாலம் மழை நீரில் அடித்துச்செல்லப்பட்டதால் நிலச்சரிவில் சிக்கியிருப்பவர்களை மீட்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக எமது கோழிக்கோடு செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வயநாட்டில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு பிரதமரின் நிவாரண நிதியிலிருந்து தலா 2 லட்ச ரூபாயை பிரதமர் அறிவித்துள்ளார்.

காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

கேரள முதலமைச்சர் திரு.பினராயி விஜயனை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிய பிரதமர் அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்று உறுதியளித்தார்.

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு,

குடியரசு துணை தலைவர் திரு.ஜக்தீப் தன்கர்,

ஆகியோரும் இச்சம்பவத்திற்கு தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொண்டுள்ளார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

முதலமைச்சர் – கேரளா:

கேரளாவில் நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் நிவாரண பணிகளுக்காக முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து 5 கோடி ரூபாய் வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கேரள முதலமைச்சர் திரு.பினராயி விஜயனை தொலைபேசி மூலம் இன்று தொடர்புகொண்டு பேசிய அவர், தேவையான உதவிகளை தமிழ்நாடு அரசு வழங்கும் என்றார்.

தமிழக தீயணைப்புத்துறையினர், மாநில பேரிடர் மேலாண்மை மீட்புக்குழுவினர், மருத்துவ குழுவினர் கேரளத்திற்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்றார்.

இயற்கை பேரிடரால் ஏற்பட்டுள்ள உயிரிழப்புகளுக்கு தமது வருத்தத்தையும், ஆழ்ந்த இரங்கலையும் முதலமைச்சர் தெரிவித்துக் கொண்டுள்ளார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

ராகுல் காந்தி

கேரளத்தில் கடந்த சில ஆண்டுகளாக தொடர் நில சரிவுகள் ஏற்படுவதால் பாதிக்கப்படும் பகுதிகளை முன்கூட்டியே கண்டறிந்து தேவையான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் அவசியத்தை மக்களவை எதிர்கட்சிதலைவர் திரு.ராகுல்காந்தி வலியுறுத்தியுள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்திற்கு பின்னர் இதுகுறித்து பேசிய அவர், மத்திய அரசு நிலசரிவால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அனைத்து உதவிகளையும் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

ஒலிம்பிக்

பாரீஸ் ஒலிம்பிக் போட்டியின் 10 மீட்டர் ஏர் பிஸ்டல் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் மனு பாக்கர், சரப் ஜோத் சிங் இணை வெண்கலப்பதக்கத்தை வென்றுள்ளது.

தென்கொரிய இணையை தோற்கடித்து நம் நாட்டிற்கு 2ஆவது பதக்கத்தை இந்த இணை பெற்று தந்துள்ளது.

பிரதமர் திரு.நரேந்திரமோடி, மனு பாக்கர், சரப் ஜோத் சிங் இணைக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டுள்ளார்.

இந்த சாதனை குறித்து நாடு பெருமிதம் கொள்வதாக மகிழ்ச்சி தெரிவித்துள்ள பிரதமர் இருவரும் தங்களது அபாரா திறமையை வெளிப்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

124 ஆண்டுகளுக்கு பின்னர் ஒரே ஒலிம்பிக்கில் இரண்டு பதக்கங்களை வென்ற முதல் இந்தியர் என்ற வரலாற்று சாதனையை மனு பாக்கர் நிகழ்த்தியுள்ளார்.

ஆடவர் ஹாக்கி போட்டியின் பி-பிரிவில் இன்று மாலை இந்தியா - அயர்லாந்தை எதிர்கொள்கிறது.

வில்வித்தை தனி நபர் ஆடவர் பிரிவில் திராஜ் பொம்மதேவராவும்,

மகளிர் பிரிவில் அன்கிதா பகத், பஜன் கவுர் ஆகியோரும் இன்று மாலை பங்கேற்கின்றனர்.

ஆடவர் குத்துசண்டை 51 கிலோ எடை பிரிவில் அமித்பங்கலும்,

மகளிர் 57 கிலோ எடைபிரிவில் ஜெயிஸ்மினும் இன்று இரவு களமிறங்குகின்றனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

மேட்டூர்

மேட்டூர் அணை 119 அடியை எட்டியுள்ளது. அணை விரைவில் முழு கொள்ளளவை எட்டும் என்பதால் திருச்சி, நாமக்கல், ஈரோடு, கரூர் உள்ளிட்ட 11 காவிரி பாயும் மாவட்டங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் தற்போது நீர்வரத்து 68 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

வாய்ஸ்

இதனிடையே கல்லணையிலிருந்து டெல்டா பாசனத்திற்காக நாளை தண்ணீர் திறக்கப்படுகிறது.

நீர்பிடிப்பு பகுதிகளில் கன மழை காரணமாக கர்நாடக அணைகளிலிருந்து இன்றுமாலை பெருமளவில் தண்ணீர் திறக்கப்படும் என்று மத்திய நீர் ஆணைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளில் கன மழை காரணமாக தேனி முல்லை பெரியாறு அணைக்கு நீர்வரத்து இன்று மூவாயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

தொடர் கன மழை காரணமாக கோவை மாவட்டம் வால்பாறை அருகே சோலையாறு அணையின் இடது கரை பகுதியில் மண் சரிவு ஏற்பட்டதால் இரண்டு பேர் உயிரிழந்தனர்.

கன்னியாகுமரி மாவட்டத்திலும் கன மழை தொடர்ந்து பெய்து வருகிறது.

திற்பரப்பு அருவியில் வெள்ளப்பெருக்கு காரணமாக சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் கன மழை காரணமாக மாயாறு ஆற்றில் காட்டாற்று வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது.

தெப்பக்காடு தரைப்பாலம் மூழ்கியதை அடுத்து உதகையிலிருந்து மசினிகுடி வழியாக மைசூர் செல்லும் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

காவிரி ஒழுங்காற்று குழு

காவிரி ஒழுங்காற்று குழுவின் 100ஆவது கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

வரும் ஆகஸ்ட் மாதத்திற்கான நீர்திறப்பு, உள்ளிட்டவை குறித்து இதில் ஆலோசிக்கப்படுகிறது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

பெரியகருப்பன்

தமிழகம் அனைத்து துறைகளிலும் சிறப்பாக செயல்பட்டு வளர்ச்சிபாதையில் சென்றுகொண்டிருப்பதாக மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

சிவகங்கையில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர் கூட்டுறவு துறையில் ஒரு லட்சம் முதல் 5 லட்சம் வரை, சிறு தொழில் கடன், கல்விகடன் உள்ளிட்டவை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 71 பயனாளிகளுக்கு 67 லட்ச ரூபாய் மதிப்பிலான நல திட்ட உதவிகளை அமைச்சர் வழங்கினார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

தா மோ அன்பரசன்:

தமிழ்நாட்டில் கல்வித்துறைக்கு, 45 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக, மாநில சிறு குறு நடுத்தர தொழில்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரத்தில் விலையில்லா மிதிவண்டிகளை பள்ளி மாணாக்கருக்கு இன்று வழங்கி பேசிய அவர், நடப்பு நிதியாண்டில், 264 கோடி ரூபாய் மதிப்பில் ஐந்தரை லட்சம் மிதிவண்டிகள் வழங்கப்படும் என்றார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

வானிலை

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக நீலகிரி கோவை திருப்பூர், தேனி, திண்டுக்கல், தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் இன்று கன, மிக கன மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மன்னார் வளைகுடா, தென் தமிழக கடலோர பகுதிகள், குமரிக்கடல் பகுதிகளில் பலத்த சூறாவளிக்காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் அடுத்த 5 நாட்களுக்கு இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

ழுழுழுழுழுழுழுழுழுழுழு